# ஒதுக்கீட்டுத் தலைப்பு -316-வடமேல் மாகாண சபை- கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை- 2012

---

## 1. செயற்பணியும் பிரதான பணிகளும்

### (அ) செயற்பணி

வடமேல் மாகாண மக்களுக்கு மிக உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை ஏற்படுத்துவதற்காக செயற்திறனானதும் ஆக்கபூர்வாமான சேவையினை வழங்குவதற்கு அர்ப்பணிப்புச் செய்தல்.

### (ஆ) பிரதான பணிகள்

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் எட்டாவது பட்டோலையில் குறிப்பிடப்பட்ட செயற்பணிகளை நிறைவேற்றுதல்

## 2. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

வடமேல் மாகாண சபையினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் கணக்காண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டு 2011 இன் 4 ஆம் இலக்க ஒதுக்கீட்டு சட்டமூலத்தின் பெயரில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 3. ஒதுக்கீட்டுக் கணக்கு

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

வடமேல் மாகாண சபையின் ஒதுக்கீட்டுத் தலைப்பு -316 இற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு 2013 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## (ஆ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

---

மீளாய்வாண்டில் மாகாண சபைக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதியேற்பாடு ரூபா 14,937,070,000 ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 13,377,671,500 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய சேமிப்பு ரூபா 1,559,398,500 ஆக இருந்ததுடன் அது மொத்த தேறிய நிதியேற்பாட்டில் 10 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினத்தின் தன்மை | வருடாந்த மொத்த மதிப்பீட்டு நிதியேற்பாடு | சகல சீராக்கங்களின் பின்னர் தேறிய நிதியேற்பாடு | உள்ளவாறான செலவினம்(2012.12.31 இல்) | சேமிப்பு(2012.12.31 இல்) | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டெழுபவை | 12,651,070,000 | 12,770,070,000 | 12,261,101,500 | 508,968,500 | 4 |
| மூலதன | 2,156,000,000 | 2,167,000,000 | 1,116,570,000 | 1,050,430,000 | 48 |
| மொத்தம் | 14,807,070,000 | 14,937,070,000 | 13,377,671,500 | 1,559,398,500 | 10 |